**தலைப்பு 166 – நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இவ் அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்கு உரித்தான அவதானிப்புகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 27 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினங்கள்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 30,815.85 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 27,249.28 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ் அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் ரூபா 3,566.57 மில்லியன் அதாவது 11.57 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **செலவினம்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டெழுபவை | 214.75 | 209.99 | 4.76 | 2.22 |
| மூலதனம் | 30,601.10 | 27,039.29 | 3,561.81 | 11.64 |
| **மொத்தம்** | **30,815.85** | **27,249.28** | **3,566.57** | **11.57** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான 16601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான மீதிகள் பின்வருமாறு காணப்பட்டன.

| செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.80 | 4.75 | 2.00 | 2.91 | 20.00 | 13.10 |

**2.3 பொதுவைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 6000/0000/00/0015/0076/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 18.71 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை மற்றும் புத்தகங்களின் படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் போதியளவானதும் பொருண்மையானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**ஏற்பாட்டின் குறைவான பயன்பாடு**

22 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,335 மில்லியன் தொகையான தேறிய ஏற்பாட்டில் ரூபா 2,107 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. திறைசேரியிடமிருந்து போதியளவில் கட்டுநிதி கிடைக்கப்பெற்றிராமை, ஒப்பந்தங்கள் வழுங்கப்படுகையில் ஏற்பட்ட பற்றாக்குறை மற்றும் திறைசேரிக்கு செலவினம் அறிக்கையிடலில் தாமதம் ஏற்படல் போன்றவற்றால் அச் சேமிப்புகள் ஏற்பட்டிருந்தன.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

2005 திசெம்பர் 10 ஆம் திகதி முதல் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட ஓர் உத்தியோகத்தரின் ரூபா 38,095 தொகையான நிலுவைக் கடன் மீதி தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 யூன் 07 ஆந் திகதிய டீபீ/4/08/2006 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், அவ் உத்தியோகத்தர் வேலை நீக்கத்திற்கு உட்பட்ட உத்தியோகத்தர் அல்லாததுடன், சேவையிலிருந்து நீக்கப்பட்ட இவ் உத்தியோகத்தரின் நிலுவைக் கடன் மீதி அமைச்சுச் செயலாளரின் 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய பதிற் கடிதத்தின் பிரகாரம் பிணையாளிகளிடம் இருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 நோக்கங்களுக்கு மாறான செயற்பாடுகளுக்காக செயற்திட்ட நிதியேற்பாடுகளை செலவிடல்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி அமைச்சிற்காக 3 மல்டிமீடியா புரெஜெக்டர்கள் ரூபா 493,500 செலவில் பொருத்தப்பட்டிருந்தன. அச் செலவினங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழுங்கல் செயற்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு நிதியிடல் சார்ந்த தேசிய கிரயம் (17) நிதி மூலத்தின் கீழான செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் படி,

வெளிநாட்டு செயற்திட்டத்திற்கு உரித்தான ஏற்பாடு அமைச்சின் தேவைப்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினை தாபித்தல் மற்றும் அதனுடன் தொடர்பான செலவினம் 166-2-3-17-2502(11) ஆம் இலக்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான செலவின விடயத்தின் கீழ் ரூபா 13,830,204 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதில் ரூபா 5,093,356 தொகை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2014 நவம்பர் 17 ஆம் திகதி மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் தலைமையில் மக்கள்சார் அமைப்பின் பிரமுகர்களின் விசேட கூட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்தது. இது குறித்த செலவின விடயத்தின் கீழான செலவினத்தில் 36.8 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) களுகங்கை நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்கு சுகாதாரச் செயற்பாடுகள் உள்ளடங்கியிராத போதிலும், அச் செயற்திட்டத்தின் உள்நாட்டு நிதியத்திலிருந்து அமைச்சிற்குக் கிடைக்கப்பெற்ற ரூபா 5 மில்லியன் தொகையில் ரூபா 4.3 மில்லியன் தொகை கொழும்பு மாவட்டப் பகுதியில் குறைந்த வருமானத்தைப் பெறும் வீடுகளுக்காக மலசலகூட வசதிகளை வழங்குவதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினத்தில் களு கங்கை நீர் வழங்கல் செயற்திட்டத்தால் நீர் வழங்கப்படாத கம்பஹா மாவட்டப் பகுதியில் மலசலகூட வசதிகள் வழங்கப்படுவதற்காகச் செலவிடப்பட்ட ரூபா 670,800 தொகையும் உள்ளடங்கியிருந்தது.

(ஈ) நீர் வடிகட்டும் இயந்திரம் வழங்கப்பட்டு பொருத்துவதற்காக வெளிநாட்டு நிறுவகம் ஒன்றால் 2014 ஒக்டோபர் 07 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 3,240,560 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 152,000 தொகை குறித்த விடயத்திற்குப் பயன்படுத்தப்படாது, அமைச்சிற்கு நோட்புக் கணனி ஒன்று, கையடக்கத்தொலைபேசி ஒன்று, ‘‘சம்சுன் கலெக்சி டெப்’’ ஒன்றையும் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,107,392 தொகை 2015 யூன் மாத இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்தது.

**3.4 செயற்திட்ட செயற்படுத்தலில் நலிவுகள் நிலவியமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சக்தியைப் பேணும் செயற்திட்டத்திற்கு (166-2-5-71) 2014 ஆம் ஆண்டிற்காக உள்நாட்டு நிதியத்தில் (17) ரூபா 3 மில்லியன் தொகையும், வெளிநாட்டுக் கடன் (12) ரூபா 3 மில்லியன் தொகையும் மதிப்பிடப்பட்ட ஏற்பாடாகக் காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2013 ஆம் ஆண்டின் போதும் இச் செயற்திட்டத்திற்கு (166-2-5-39) உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 50 மில்லியன் தொகையும் வெளிநாட்டுக் கடன் ரூபா 150 மில்லியன் தொகையுமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் வருடத்தினுள் எதுவித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் பாரியளவிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்மொழிவுத் திட்டங்களின் கீழான 6 செயற்திட்டங்களுக்கு உள்நாட்டு நிதியிலிருந்து ரூபா 569 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 41.9 மில்லியன் தொகையான மேலதிக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதை அடுத்து ஆண்டின் இறுதியில் தேறிய ஏற்பாடு ரூபா 610.9 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இதில் ரூபா 239.4 மில்லியன் தொகை ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகை தேறிய ஏற்பாட்டின் 39 சதவீதமாகக் காணப்பட்டது. தேவைப்பாட்டிற்கு மேலாக நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தமையால் இச் சேமிப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) 08 செயற்திட்டங்களுக்கு உரித்தான 09 செலவின விடயங்களுக்காக இருந்த ரூபா 581.2 மில்லியன் தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் முழுதாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 03 செயற்திட்டங்களுக்கு உரித்தான 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 700 மில்லியன் தொகையான வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டு மானியங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியீடு சார்ந்த உள்நாட்டுக் கிரயத்திற்கான ஏற்பாடு, செயற்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்படுவதற்கு முடியாமை மற்றும்

ஒப்பந்தக் கையளிப்பிலான தாமதம் போன்ற முகாமைத்துவ நலிவுகளின் அடிப்படையில் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் வேறு செலவின விடயங்களுக்கு அவ் ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது.

(உ) செயற்திட்டத்தின் 08 செலவின விடயங்களுக்கு நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்ட ரூபா 519 மில்லியன் தொகை முற்றாகவோ அல்லது அவ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 1,304 மில்லியன் தொகையான ஏற்பாடு எஞ்சியிருந்தது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்த மிகையான ஏற்பாட்டைப் போன்று சேமிப்பு 251 சதவீதமாகக் காணப்பட்டதன் காரணமாக மிகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமைக்குக் குறிப்பிட்டிருந்த காரணங்கள் எவ்வித அடிப்படையும் சார்ந்திருக்கவில்லை.

(ஊ) 04 செயற்திட்டங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாட்டில் ரூபா 498,322,854 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பிற்கு ஒப்பந்த வழங்கலிலான தாமதம் காரணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. செயற்திட்டங்களின் ஒப்பந்தங்களைக் கையளித்தல் தாமதமடைதல் அச் செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்ய தாமதமடைந்தமைக்கும் அதன் படி, செயற்திட்டக் காலம் நீடிக்கப்படுவதற்கும் செயற்திட்டங்களின் செலவினம் அதிகரிப்பதற்கும் காரணமாக இருந்தமை கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

## 3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்கியிராத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 1646 | அமைச்சிடம் இருந்த குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்தப் பொழிப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2014 ஒக்டோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 3.6 விளைவற்ற சொத்துக்கள்

ஓட்டத்திற்குப் பயன்படுத்தப்பட முடியாத 07 முச்சக்கர வண்டிகளும் 02 மோட்டார் வண்டிகளும் அமைச்சின் வளாகத்தில் பாதுகாப்பற்ற முறையில் 2014 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### 3.7 வேறு நிறுவகங்களின் சொத்துக்கள் அமைச்சால் பயன்படுத்தப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரித்தான 11 வாகனங்கள் அமைச்சால் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அவ் வாகனங்களின் காப்புறுதி, வருமான அனுமதிப்பத்திரம், பழுதுபார்த்தல்கள் மற்றும் டீசல் வரி போன்றவற்றிற்காக ரூபா 1,108,564 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சின் வாகனப் பட்டியல்களும் வாகனப் பதிவுப் புத்தகங்களையும் பரீட்சிக்கையில் அமைச்சின் இரு செயற்திட்டங்களுக்கு உரித்தான 26 வாகனங்கள் முறையாகக் கையேற்கப்படாது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 19 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 80 | 53 | 27 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 37 | 25 | 12 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக அடிப்படை) | 04 | 06 | - | 02 |
| | மொத்தம் | **151** | **104** | **49** | **02** |

### (ஆ) வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்

அமைச்சால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | காலப்பகுதி |
|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 2012 ஆகஸ்ட் முதல் 2015 செப்தெம்பர் வரை |
| மூன்றாம் நிலை | 02 | 2007 மற்றும் 2014 முதல் 2015 செப்தெம்பர் வரை |
| ஆரம்ப நிலை | 04 | 2012 முதல் 2015 செப்தெம்பர் வரை |
| மொத்தம் | **07** | |